for them to pump out water. They have done it. Now I do not think the necessity continues and, therefore, they will not go deeper.

Allowances for Medical Officers.

* 97. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether it is a fact that compensatory and special compensatory allowances are being paid to Medical Officers with M.B., B.S. qualification working in Government Hospitals and Primary Health Centres;

(*b*) if so, the special nature of work for which the same is being paid to them; and

(*c*) whether such special nature of work is not being done by the Medical Officers with M.B., B.S. qualification working in Panchayat Union Dispensaries?

மருத்துவ அலுவலர்களுக்குப் படி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணியாற்றும் எம்.பி., பி.எஸ். பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களுக்கு ஈட்டுப்படியும் சிறப்பீட்டுப் படியும் வழங்கி வரப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், எந்தச் சிறப்புப் பணிக்காக, இது அவர்களுக்கு வழங்கப்படுகிறது ?

(உ) ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பணியாற்றும் எம்.பி.,பி.எஸ். பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்கள் அது போன்ற சிறப்புத் தன்மை வாய்ந்த பணியாற்றவில்லையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) & (இ) அரசு மருத்துவமனைகளிலும், அரசு மருந்தகங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணியாற்றும் தேர்வுநிலை அறுவை

சிகிச்சை உதவி மருத்துவர்களும், அறுவை சிகிச்சை மருத்துவர்களும் கீழ்க் காணும் ஈட்டுப் படியைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர் :—

(1) நகராட்சி பகுதிகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணியாற்றும் மருத்துவர்கள் நீங்கலாக, பிற இடங்களில் (rural areas) பணியாற்றுவதற்கு மாத மொன்றுக்கு 75 ரூபாய் சிறப்பு ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(2) மருத்துவ அதிகாரி எந்த அரசு மருத்துவ நிலையத்தில் பணியாற்றுகிறாரோ அந்த மருத்துவ நிலையத்திலிருந்து 5 மைல் தொலைவிற்குள் அல்லது 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பதிவு பெற்ற மருத்துவர்கள் ஒருவர் அல்லது பலர் தனிப்பட்ட முறையில் மருத்துவராகத் தொழில் புரியக்கூடிய அத்தகைய வட்டாரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுபவர்கள் நீங்கலாக, மற்றவர்களுக்கு வரையறுத்த தனிப்பட்ட முறையில் மருத்துவ தொழில் புரிதல் கட்டுப்படுத்தப்பட்டதற்காக மாதமொன்றுக்கு ரூபாய் 75 ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(3) ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு மட்டுமே ஏனைய ஈட்டுப்படி வழங்கப்படுவதால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கு 125 ரூபாய் மொத்த ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(உ) இவை எதுவும் சிறப்புப் பணி எதற்காகவும் வழங்கப்படவில்லை.

Sexually Transmitted Diseases.

*98. Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. V. D' MONTE) : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether the Government are aware of the increase in Sexually Transmitted Diseases in the City; and

(*b*) if so, the steps proposed to be taken to control these diseases?

பாலுறவால் நோய்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை மாநகரில், பாலுறவால் பரவும் நோய்கள் பெருகியிருத்தலை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இந்த நோய்களைக் கட்டுப்படுத்த எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?